Amãna Bank

## சேமிப்புக் கணக்குகள்

எங்களது சேமிப்புக் கணக்குகள் இலாபத்தைப் பங்கிடும் அடிப்படையில் அமைந்துல்லது. எமது முதலீட்டுச் சேர்க்கையினூடாகப் பெற்றுக்கொள்ளப்படும் இலாபத்தில் உங்கள் முதலீடுகளுக்குரிய பங்குகள் பகிர்ந்தளிக்கப்படும். எமது முதலீட்டுச் செயற்பாடுகளின் மேலதிக வெற்றி உங்களுடைய முதலீட்டு இலாபத்தை அதிகரிக்கும்.

உங்களுடைய முதலீடுகள் சமூகத்தி கேடு விளைவிக்கக் கூடிய எந்த வர்த்தக நடவடிக்கைகளிலும் உபயோகிகக்கட மாட்டாது என்ற உறுதிப்பாட்டினூடாக உங்களுக்கு நிம்மதியாக மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பிரதிபலன்களை அனுபவிப்பதற்கு சந்தர்ப்பத்தை நாம் வழங்குகின்றோம்.

**சேவை அம்சங்கள்**

சேவைக் கோட்பாடு : முதாரபா (இலாபப் பங்கீட்டு)
இலாப விகிதம் : 40% வாடிக்கையாளருக்கு, 60% அமானா வங்கிக்கு
இலாபக் கொடுப்பனவு : மாதாந்தம்
ஆகக் குறைந்த முதலீடு : ரூ. 2,500

**அனுகூலங்கள்** : - வைப்புப் புத்தகத்தை அல்லது வங்கிக் கூற்றைத் தெரிவுசெய்யலாம்
- இலத்திரனியல் ஆவண வசதி
- நிலையான கட்டளை வசதி

**தகைமை**

- வயது 18 அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கையில் வசிப்பவர்
- கம்பனிகள். சங்கங்கள் மற்றும் கழகங்கள்

**தேவையான ஆவணங்கள்**

**தனி நபர்:** தேசிய அடையாள அட்டை/கடவுச் சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம்
**கம்பனிகள், சங்கங்கள் மற்றும் கழகங்கள்:** பதிவுச் சான்றிதழ்

## கருத்துகளும் முறைப்பாடுகளும்

எமது கிளைகளிலும், www.amana.lk எனும் இணையத்தள முகவரியிலுமுள்ள "எங்கள் சேவை பற்றிய உங்கள் அனுபவத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்" எனும் படிவத்தின் மூலம் எமது சேவை பற்றிய உங்களது பெறுமதிமிக்க கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

எமது சேவை பற்றிய முறைப்பாடுகளை பின்வரும் வழிமுறைகள் மூலம் அறியத் தரவும்

1. கிளை முகாமையாளரை அணுகுவதன் மூலம்
2. முறைப்பாடுகளை feedback@amana.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம்
3. 0117 756 756 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம்
4. எமது பின்வரும் இணையத்தள முகவரியிலுள்ள "தொடர்பு கொள்ளவும்" பக்கத்தில் தகவல் கொடுப்பதன் மூலம்

உங்கள் முறைப்பாடுகள் தொடர்பான எமது நடவடிக்கைகளை நாம் உங்களுக்கு அறியத்தருவோம்.

# முதாரபா ஒப்பந்தம்

## சேமிப்புக் கணக்கு

இந்த முதாரபா முதலீட்டு ஒப்பந்தம், இனிமேல் "முதலீட்டாளர்/கள்" என்றும் அழைக்கப்படும் …………………………………………………………………………….. என்பவரை/என்பவர்களை (சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப, அவரது/அவர்களது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள், நிர்வாகிகள், வழித்தோன்றல்கள், உரிமையளிக்கப்பட்டவர்கள் ஆகியோரையும் இப் பதம் உள்ளடக்கும்) ஒரு தரப்பாகவும்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும், இல.480, காலி வீதி, கொழும்பு 03 என்னும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட உரிமம் பெற்ற வர்த்த வங்கியும், இனிமேல் சில சந்தர்ப்பங்களில் "முதாரிப்" அல்லது "வங்கி" என்று அழைக்கப்படுவதுமான அமானா வங்கி லிமிட்டட்டை (சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப, அமானா வங்கி லிமிட்டட்டின் வழித்தோன்றல்கள், உரிமை ஒப்படைக்கப்பட்டவர்கள் ஆகியோரையும் இப் பதம் உள்ளடக்கும்) மறுதரப்பாகவும் கொண்டு 20… ஆம் ஆண்டு …………… மாதம் …..ஆம் திகதி …………………………….. என்னுமிடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலாபமீட்டுமென எதிர்பார்க்கப்படும் வங்கியின் வியாபார நடவடிக்கைகளில் முதலீடு செய்வதற்காக, வங்கியின் முதாரபா நிதியத்தில் காலத்திற்குக் காலம் முதலீடு செய்யும் நோக்கத்துடன் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க முதலீட்டாளர்/கள் விரும்புவதாலும்,

இலாபமீட்டுமென எதிர்பார்க்கப்படும் வங்கியின் வியாபார நடவடிக்கைகளில் முதலீடு செய்வதற்காக வழங்கப்படும் அத்தகைய பணத்தை ஏற்றுக்கொண்டு, அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தைப் பின்வரும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகப் பகிர்ந்துகொள்ள வங்கி இணங்குவதாலும்,

இந்த ஒப்பந்தம் மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கிடையே கைச்சாத்திடப்பட்டு, பின்வருமாறு இணக்கம் காணப்பட்டுள்ளது:

**1. சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தாதவிடத்து, இந்த ஒப்பந்தத்தில்**
"முதலீடு" என்பது முதலீட்டாளருக்கும் வங்கிக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட இலாபப் பங்கீட்டு அடிப்படையில் முதலீட்டாளரினால் / முதலீட்டாளர்களினால் வங்கியிடம் ஒப்படைக்கப்படும் பணத்தைக் குறிக்கும்.
"முதாரபா நிதியம்" என்பது ஷரிஆவுக்கு அமைவான வியாபார முயற்சிகளில் முதலீடு செய்வதற்கென வங்கியின் வாடிக்கையாளர்களினால் ஒப்படைக்கப்பட்டு, வங்கியினால் நிர்வகிக்கப்படும் நிதிகளின் தொகுதியைக் குறிக்கும்.
"இலாபம்" என்பது முதாரபா நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து மேன்மிகுதியாகக் கிடைக்கும் பணத்தைக் குறிக்கும். இந்த இலாபத் தொகை, குறிப்பிட்ட காலப்பகுதியின் (மாதாந்தம்/காலாண்டு/அரையாண்டு) முடிவில் நிதியத்தின் முதலீட்டாளர்களுக்கும் வங்கிக்கும் இடையே பகிர்ந்துகொள்ளப்படும்.
"நட்டம்" என்பது முதாரபா நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீட்டின் விளைவாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் (மாதாந்தம்/ காலாண்டு/அரையாண்டு) ஏற்பட்ட இழப்பைக் குறிக்கும். இதனை நிதியத்தின் முதலீட்டாளர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

**2. இலாபமும் நட்டமும்:**
நிதியத்தினால் சம்பாதிக்கப்படும் இலாபமானது, பகிர்ந்தளிப்பு மேற்கொள்ளப்படும்போது நடைமுறையிலிருந்த இலாபப் பங்கீட்டு விகிதத்தில் (PSR) பகிர்ந்தளிக்கப்படும். இலாபப் பங்கீட்டு விகிதம் காலத்திற்குக் காலம் மாற்றமடையும் என்பதை முதலீட்டாளர் இத்தால் ஏற்றுக்கொள்கிறார். இலாபம் வரவு வைக்கப்படும் சுற்றோட்டத்தின் ஆரம்பத்தில் இந்த மாற்றம் பற்றி அறிவிக்கப்படும்.

நட்டம் ஏற்படும் பட்சத்தில், முதலீட்டாளர் நிதியத்திலுள்ள தனது மூலதனத்திற்கு மேற்படாத ஒரு அதிகபட்ச பெறுமதி வரை நட்டத்தைப் பொறுப்பேற்க வேண்டும்.

நட்டத்தை ஏற்படுத்திய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், நிதிய முகாமையாளர் என்ற வகையில் வங்கி எவ்வித வருமானத்திற்கும் உரித்துடையதாகாது.

**3. முதாரபா முதலீட்டு நிதியத்தில் முதலீடு செய்தல்:**
ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் ஒரு சேமிப்புக் கணக்கு புத்தகம் வழங்கப்படும். இப் புத்தகம் வங்கியிலுள்ள அவரது முதலீட்டிற்குச் சான்றாகும். இப் புத்தகம் எல்லா வேளைகளிலும் புதுத் தகவல்கள் கொண்டதாக இருப்பதை உறுதிப்படுத்துவது முதலீட்டாளரின் / முதலீட்டாளர்களின் பொறுப்பாகும்.

**4. இலாபத்தை நிர்ணயித்தல்:**
முதலீட்டின் பேரில் ஒரு குறிப்பிட்ட வீதத்திலான வருமானம் கிடைப்பதை வங்கியினால் உத்தரவாதப்படுத்த முடியாது என்பதையும் முதாரபா நிதியத்தினால் ஈட்டப்பட்ட உண்மையான இலாபத்தை, முன்கூட்டியே ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் இலாபப் பகிர்ந்தளிப்பின்போது நடைமுறையிலிருந்த இலாபப் பங்கீட்டு விகிதத்தின் (PSR) அடிப்படையில் பகிர்ந்தளிக்க மாத்திரமே வங்கி இணங்குகின்றது என்பதையும் முதலீட்டாளர்/கள் மற்றும் வங்கி ஆகிய இருதரப்பினரும் நன்கு புரிந்துகொண்டு அதற்கு உடன்படுகின்றனர். காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படும் PSR விகிதம் வங்கியினால் வெளியிடப்படும்.

முதலீட்டின் பேரிலான இலாபம் தினசரி கணிக்கப்பட்டு, மாதாந்தம்/காலாண்டுதோறும்/ஆண்டிற்கு இரு தடவை அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் முறையில் பகிர்ந்தளிக்கப்படும்.

**5. மீளப்பெறுகைகள்:**
முதலீட்டாளர் தனது விருப்பத்திற்கேற்ப தனது முதலீட்டிலிருந்து பணத்தை மீளப்பெற முடியும்.

**6. செலவுகள்:**
முதாரபா நிதியத்தின் நிர்வாகத்துடன் நேரடியாகத் தொடர்புடைய செலவுகளை அந்த நிதியத்திலிருந்து அறவிட வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**7. இடைநிறுத்தங்கள்**
முதலீட்டாளரின் மனநிலைப் பாதிப்பு, வகையறவு, வங்குரோத்துநிலை அல்லது மரணம் பற்றி செல்லுபடியான அறிவித்தல் கிடைக்கும் பட்சத்தில், அத்தகைய அறிவித்தல் கிடைத்த திகதியிலிருந்து சகல கொடுக்கல் வாங்கல்களும் இடைநிறுத்தப்படும். கணக்கிலுள்ள முதலீட்டுத் தொகையின் நீக்கத்திற்கான ஏற்பாடுகளைக் குறித்துரைக்கும் நீதிமன்ற உத்தரவு வங்கிக்குக் கிடைக்கும் வரை, முதாரபா நிதியத்தில் முதலீட்டாளரின் / முதலீட்டாளர்களின் பெயரிலுள்ள பணம் மீளப்பெறுகை செய்யப்படாத முறையில் வங்கியினால் தடுத்து வைக்கப்படும்.

**8. கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள்**
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் கூட்டாகக் கணக்கை வைத்திருந்தால், அவர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், வங்கியின் பாத்தியம் மற்றும் ஏதேனும் வழியில் எதிரீடு செய்யும் உரிமைக்கும் முதாரபா முதலீடுகளை ஆளுகை செய்யும் வங்கி விதிகளின் ஏற்பாடுகள் அல்லது காலத்திற்குக் காலம் கொண்டுவரப்படும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கும் உரிமைக்கும் எவ்விதத்திலும் முரணாகாத விதத்தில், உயிருடன் எஞ்சியிருப்பவர்களின் பெயர்களில் முதலீடுகளை வைத்திருக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், அது பற்றி எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்கும் கடப்பாட்டை மற்றவர்கள் இத்தால் ஏற்றுக்கொள்கின்றனர்.

9. ஏற்பாடு
முதாரபா நிதியத்தின் முகாமையாளர் என்ற முறையில் வங்கியானது தனது அனுபவம், அறிவு, நிபுணத்துவம் என்பவற்றைப் பயன்படுத்தி, இலாபப் பணத்திலிருந்து மற்றெந்த அறவீட்டையும் அறவிடுவதற்கு முன்னர், செயற்படாத முராபஹா, முஷாரக்கா மற்றும் அது போன்ற திட்டங்களின் விளைவாக ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈடுசெய்யும் பொருட்டு, மதிப்பீடு செய்யப்பட்ட இழப்புக்களை, இலாபப் பங்கீடு மேற்கொள்ளப்படும் வேளையில், எதிரீடு செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. முதாரபா நிதியத்தை முடிவுறுத்தல் செய்யும் வேளையில், ஏற்பாடுகளிலுள்ள ஏதேனும் மேன்மிகுதி அல்லது பற்றாக்குறை, அப்போது முதாரபா நிதியத்தின் பங்காளிகளாக இருந்தவர்களினால் அனுபவிக்கப்படும் அல்லது உள்வாங்கப்படும்.

**இலாபப் பங்கீட்டு விகிதம்**
**அமானா வங்கி:** [ ][ ] %
**வாடிக்கையாளர்:** [ ][ ] %

முதலீட்டாளரின்/களின் கையொப்பம்

அமானா வங்கியின் சார்பில் இடப்பட்ட கையொப்பம்

| சாட்சிகள்: | கையொப்பம் | பெயர் | திகதி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

Amãna Bank

# கணக்கு வைப்பாளர்களுக்கான பொது வியாபார நிபந்தனைகள்

1. வேறு எவ்விதமான, எழுத்துமூல ஒப்புதலும் வழங்கப்படாத பட்சத்தில், அமானா வங்கி லிமிட்டட்டில் ("வங்கி") கணக்கொன்றை ஆரம்பிக்கும் வாடிக்கையாளர் இந்த நிபந்தனைகளுக்குப் பணிந்து நடக்க இணங்குகின்றார்.

2. வாடிக்கையாளர் தனது கையொப்ப மாதிரியையும் வங்கியுடனான தொடர்புகளில் வாடிக்கையாளரின் சார்பில் செயற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர் (நபர்கள்) இருந்தால், அவரின் (அவர்களின்) கையொப்ப மாதிரிகளையும் வங்கிக்கு வழங்கக் கடமைப்பட்டுள்ளார். அதிகாரமளிக்கப்பட்ட நபர்களுக்கான அதிகாரமளிப்பு பொதுவானதா அல்லது வரையறை செய்யப்பட்டதா என்பதும் வரையறை செய்யப்பட்டதாயின் எந்த அளவுக்கு வரையறை செய்யப்பட்டது என்பதும் தெரிவிக்கப்பட வேண்டும். அத்தகைய நபர்களின் அதிகாரங்கள் பற்றி கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைப்பு உறுப்புரைகளில் அல்லது பிரமாணங்களில் அல்லது பொதுவான அல்லது மட்டுப்படுத்திய அட்டோர்னித் தத்துவத்தில் அல்லது வேறேதும் ஆவணங்களில் எவ்வாறு குறித்துரைக்கப்பட்டிருந்தாலும், படிவங்களில் வரையறைகள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படாவிட்டால், எந்தவொரு தொகை மற்றும் எந்தவொரு விடயம் தொடர்பிலும், மாதிரியாக வழங்கப்பட்ட கையொப்பத்திற்கு வாடிக்கையாளர் பூரணமாகக் கட்டுப்படுவார். வாடிக்கையாளரைக் கட்டுப்படுத்த தகுதியுள்ள நபர்கள் அல்லது அவர்களின் அதிகார எல்லைகள் என்பவற்றில் மாற்றங்கள் செய்யப்படின், அவை மேற்குறிப்பிட்ட படிவங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள கையொப்ப மாதிரிகளை வழங்கத் தவறுவதால் அல்லது பிழையாகவோ பூரணமற்றதாகவோ வழங்குவதால், வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய சேதத்திற்கு அல்லது இழப்பிற்கு வங்கி பொறுப்பாகாது.

3. கணக்கானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் பெயர்களில் இருக்குமாயின், அக் கணக்குத் தொடர்பாக அவர்களில் ஒருவர் அல்லது சிலர் எடுக்கும் நடவடிக்கைகள் அனைவரையும் கட்டுப்படுத்தும். வேறு விதமாக எழுத்து மூலம் ஒப்புக்கொள்ளப்படாத பட்சத்தில், அவர்கள் அனைவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் அக் கணக்கிற்குப் பொறுப்பாளியாவார்கள்.

4. விசேட நோக்கங்களுக்காக (மாற்றம், பரிசோதிப்பு, பத்திரங்களை உறுதியான முறிகளாக மாற்றுதல் அல்லது பங்கிலாபத்தைச் சேகரித்தல் போன்றவை) வங்கியிடம் கையளிக்கப்பட்ட பிணைகள் தவிர, வாடிக்கையாளரின் இடர் பொறுப்புடன் வங்கியின் பாதுகாப்பிலுள்ள அல்லது வங்கியின் பாதுகாப்பிற்குள் வரக்கூடிய அல்லது வங்கியின் சார்பில் மூன்றாவது தரப்பினரால் வைத்திருக்கப்படும் சகல பெறுமதியுள்ள பத்திரங்களும் எல்லா உரிமைக் கோரல்கள் தொடர்பிலும் வங்கிக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட பிணைகளாகக் கருதப்படும். வாடிக்கையாளருக்கு எதிராக வங்கி வைத்திருக்கக்கூடிய, இன்னமும் முதிர்ச்சி அடையாத அல்லது தற்செயலான பத்திரங்களும் இதில் உள்ளடங்கும். மேற்குறிப்பிட்ட வாக்குறுதியில் உள்ளடங்கும் பிணைகள் தொடர்பில் வேறு விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காவிடின், வங்கி அவற்றைத் தனது பொதுவான பிணைகள் களஞ்சியத்திற்கு எடுத்துக்கொள்வதுடன், அவை தொடர்பாக மீள் வாக்குறுதியைப் பெற்றுக்கொள்ளவும் உரிமை கொண்டுள்ளது.

5. வாடிக்கையாளர் ஏதேனும் விதத்தில் வங்கிக்கான தனது கடமைகளை நிறைவேற்றத் தவறுவாராயின், வங்கி தனக்கு வருமதியாகவுள்ள முழுத் தொகையையும் செலவுகளையும் பெற்றுக்கொள்வதற்காக, முன்னறிவித்தல் எதுவும் கொடுக்காமலும் அழைப்பாணை எதுவும் விடுக்காமலும், தனக்கு உசிதமான வேளையிலும் உசிதமான முறையிலும் பிணை முழுவதையும் அல்லது அதில் ஏதேனுமொரு பகுதியைப் பயன்படுத்துவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது. இது வங்கியின் நிறைவேற்று உரிமைக்கு மேலதிகமாக அதிகாரமாகும்.

6. வங்கி தனக்கு உரித்துள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட மற்றும்/அல்லது பொதுவான பாத்தியம் அல்லது ஏதேனும் உரிமைகள் அல்லது குறைதீர்ப்புக்களுக்கு மேலதிகமாக, சட்டத்தின் செயற்பாடு மூலமாகவோ அல்லாமலோ, வாடிக்கையாளரின் மற்றும்/அல்லது எம்மில் ஒருவரின் அல்லது பலரின் சகல அல்லது ஏதேனும் கணக்கு (கணக்குகள்) மற்றும் பொறுப்புக்களை ஒருங்கிணைத்து, அத்தகைய கணக்கில் (கணக்குகளில்) உள்ள ஏதேனும் தொகையை (தொகைகளை) வேறேதும் கணக்கில் (கணக்குகளில்) உள்ள பொறுப்புக்களை, அப் பொறுப்புக்கள் உண்மையானதாக அல்லது தற்செயலானதாக இருந்தாலும் முதன்மையானதாக அல்லது துணையானதாக இருந்தாலும் தனித்தனியானதாக அல்லது கூட்டானதாக இருந்தாலும், எதிரீடு செய்வதற்காக அல்லது மாற்றம் செய்வதற்காக அல்லது வேறேதும் தேவைக்காகப் பயன்படுத்துவதற்கு, வாடிக்கையாளருக்கு அறிவித்தல் கொடுக்காமலே, எந்த நேரத்திலும் நடவடிக்கை எடுக்க முடியும்.

7. வங்கியானது வரவுப் பதிவுகளைச் செய்ய வேண்டுமாயின், அப் பதிவுகளை ஊர்ஜிதம் செய்யக்கூடிய ஏதேனும் மாற்றுப் பெறுமதியை வாடிக்கையாளர் அல்லது அவரின் சார்பில் செயற்படும் இன்னுமொருவர் வங்கிக்கு வழங்குவது அவசியமாகும். இந்த மாற்றுப் பெறுமதி சரியான முறையிலும் சரியான நேரத்திலும் வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின், முன்னறிவித்தல் கொடுக்காமலே ஏதேனும் வரவுப் பதிவினை முழுமையாக அல்லது பகுதியாக இரத்துச்செய்துவிடும் உரிமை வங்கிக்கு உண்டு.

8. கணக்கு விபரக்கூற்றுகள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். ஏதேனும் தவறு அல்லது விடுபடுகை இருந்தால், உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். விபரக்கூற்று கிடைத்த ஏழு தினங்களுக்குள் தவறுகள் எழுத்து மூலம் அறிவிக்கப்படாவிட்டால், வாடிக்கையாளர் அந்த விபரக்கூற்று சம்பந்தமாகக் கேள்வி கேட்கும் உரிமையை இழந்துவிடுவார். அதன் பின், அந்த விபரக்கூற்று வங்கியும் வாடிக்கையாளரும் ஒப்புக்கொண்ட இறுதி முடிவாகக் கருதப்படும்.

9. வாடிக்கையாளர் வங்கியிலுள்ள தனது கணக்கின் பேரில் காசோலைகளை எழுதுவது சம்பந்தமாக பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:

(அ) வங்கியினால் வழங்கப்பட்ட காசோலைப் புத்தகத்தை வாடிக்கையாளர் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். காசோலைப் புத்தகம் அல்லது அதன் தாள்கள் தொலைந்தால் அல்லது திருட்டுப்போனால், வாடிக்கையாளர் அது பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிப்பதுடன், எழுத்து மூலம் ஊர்ஜிதம் செய்யவும் வேண்டும். இந்த அறிவித்தல் கிடைப்பதற்கு முன்னர் தொலைந்த, களவாடப்பட்ட, சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட, மோசடியாக மாற்றம் செய்யப்பட்ட அல்லது போலி காசோலையின் பேரில் வங்கி பணத்தை வழங்கியிருந்தால், அத் தொகையை வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைக்க வங்கிக்கு உரிமையுண்டு.

(ஆ) வாடிக்கையாளர் காசோலையை எழுதும்போது, அதில் ஏதேனும் மோசடியான மாற்றங்கள் செய்யப்படுவதை தவிர்க்கும் விதத்தில் எழுத வேண்டும். காசோலைத் தொகையானது எழுத்திலும் இலக்கத்திலும் எழுதப்பட வேண்டும். மேலதிக இலக்கங்களை அல்லது சொற்களை கண்டுபிடிக்க முடியாத முறையில் சேர்ப்பதற்கு வாய்ப்பளிக்கப்படக் கூடாது.

(இ) காசோலைப் புத்தகம் தேவையற்றதாகப் போகும் பட்சத்தில் அல்லது கணக்கு மூடப்படும் பட்சத்தில், வாடிக்கையாளர் உடனடியாக தனது காசோலைப் புத்தகத்தை வங்கிக்குத் திருப்பியளிக்க வேண்டும்.

10. காசோலைகள் தொலையும்/களவாடப்படும் அல்லது தவறிப்போகும் சந்தர்ப்பங்களில் அவற்றின் மீதான கொடுப்பனவைத் தடை செய்வதற்காக, வாடிக்கையாளர் வங்கிக்கு உடனடி அறிவுறுத்தலை வழங்க வேண்டும். காசோலையின் இலக்கம், திகதி, தொகை, பெறுநரின் பெயர் ஆகிய விபரங்கள் இதில் தெரிவிக்கப்பட வேண்டும். அறிவுறுத்தல் கிடைக்கும் வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காத காசோலையின/காசோலைகளின் பேரில் மாத்திரமே இந்த அறிவுறுத்தல்கள் செல்லுபடியாகும். கொடுப்பனவுத் தடை அறிவுறுத்தல் தொலைபேசி மூலம் வழங்கப்படுமாயின், 48 மணிநேரத்திற்குள் எழுத்து மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டும். 48 மணிநேரத்திற்குள் எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட கொடுப்பனவுத் தடை அறிவுறுத்தலை நிராகரிக்க வங்கிக்கு உரிமையுண்டு.

11. வங்கி தனது வழமையான வியாபார நடைமுறைக்கு அமைவாகக் காலத்திற்குக் காலம் அறவிடும் வங்கியாளரின் அறவீடுகள், செலவுகள், கட்டணங்கள், தரகுப்பணங்கள், அபராதங்கள், ஏதேனும் இலாபங்கள், முதலீட்டின் மீதான வருமானங்கள், சட்ட மற்றும் ஏனைய அறவீடுகள் என்பன வரி விதிப்பிற்கு உரியவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவையாக அல்லது தற்செயலானவையாக இருந்தாலும், அவை முழுவதையும், அத்துடன் வங்கியினால் எப்போதாவது செலுத்தப்பட வேண்டியிருக்கும் வரிகள் மற்றும்/அல்லது அறவீடுகள் அல்லது விதிப்பனவுகள் தொடர்பிலான தொகைகளையும் வங்கியாளரின் கணக்கில் (கணக்குகளில்) பற்று வைக்க உரிமை கொண்டுள்ளது. தபால், முத்திரை, தொலைபேசி, SWIFT கட்டணம் என்ற வகையில் வங்கிக்கு ஏற்படும் சகல செலவுகளும் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படும்.

12. வங்கி தனது தடங்கலற்ற சொந்தத் தீர்மானத்தின் பேரில், எவ்வித காரணமும் தெரிவிக்காமல், எந்த நேரத்திலும் எந்தவொரு கணக்கையும் முடிவிட முடியும். எனினும், கணக்கு மூடப்படுவது பற்றி வங்கி வாடிக்கையாளருக்கு 30 நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படும். இந்த அறிவித்தல், வாடிக்கையாளரின் கடைசியாகத் தெரிந்த முகவரிக்குத் தபாலில் அனுப்பப்பட்டதும், அறிவித்தல் வழங்கப்பட்டுவிட்டதாகக் கொள்ளப்படும். வாடிக்கையாளர் தன்னிடமுள்ள பாவிக்கப்படாத காசோலைகள் அனைத்தையும் வங்கியின் கோரிக்கையின் பேரில் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

13. வாடிக்கையாளர் தான் வழங்கிய சகல தகவல்களும் (கணக்கின் ஆரம்பப் படிவத்தில் அல்லது வேறு வழிகளில் வழங்கப்பட்ட தகவல்கள்) தனது அறிவிற்கேற்பே உண்மையானவையும் சரியானவையும் என்று உறுதியளிக்கிறார். இத் தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அதனை வங்கிக்கு அிவிப்பது வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

14. வாடிக்கையாளரின் முகவரியில் மாற்றம் ஏற்படின், அது பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

15. வங்கியிலுள்ள சகல வைப்புக்களும் அதன் கருமபீடங்களில் செலுத்தப்படக்கூடியவையாகும்.

16. அமானா வங்கியின் நடைமுறைக் கணக்குகள் குவார்ட் (கடன்) கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படும். வங்கியுடன் விசேடமாக ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டாலன்றி, வாடிக்கையாளர் தனது கணக்கிலுள்ள தொகைக்கு மேலதிகமாகப் பற்று வைக்கக் கூடாது. கணக்கில் போதிய பணம் இல்லாவிட்டால், காசோலையை நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் ஒவ்வொரு காசோலைக்கும் கட்டணம் அறவிடப்படும். எனினும், வாடிக்கையாளரின் அதிகாரம் பெற்ற ஒரு கையொப்பதாரரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட காசோலை(கள்) மற்றும்/அல்லது பில்கள் மற்றும்/அல்லது வாக்குறுதிப் பத்திரங்கள் என்பவற்றிற்கு வங்கி தனது சொந்தத் தீர்மானத்தின் பேரில் மதிப்பளிக்க முடியும். அத்தகைய காசோலைகள் மதிப்பளிக்கப்படுவதால், கணக்கில் மேலதிகப் பற்று வைக்க நேரிட்டாலும் மேலதிகப் பற்று ஏற்பாடு மீறப்பட்டாலும், அத்தகைய சந்தர்ப்பங்களில் அவை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களில், மேலதிகமாகப் பற்று வைக்கப்படும் தொகையையும் வங்கியின் வழமையான வியாபார நடைமுறைக்கு அமைவாகக் காலத்திற்குக் காலம் அறவிடப்படும் வங்கியாளரின் அறவீடுகள், செலவுகள், கட்டணங்கள், தரகுப்பணங்கள், அபராதங்கள், ஏதேனும் இலாபங்கள், முதலீட்டின் மீதான வருமானங்கள், சட்ட மற்றும் ஏனைய அறவீடுகள் என்பன வரி விதிப்பிற்கு உரியவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவையாக அல்லது தற்செயலானவையாக இருந்தாலும், அவை முழுவதையும், அத்துடன் வங்கியினால் எப்போதாவது செலுத்தப்பட வேண்டியிருக்கும் வரிகள் மற்றும்/அல்லது அறவீடுகள் அல்லது விதிப்பனவுகள் தொடர்பிலான தொகைகளையும் கோரிக்கையின் பேரில் நிபந்தனையின்றி செலுத்துவதற்கு வாடிக்கையாளர் கடமைப்பட்டுள்ளார். முன்சொல்லப்பட்ட செலவுகளையும் அறவீடுகளையும் வாடிக்கையாளரிடமிருந்து மீட்கும் உரிமை வங்கிக்கு உண்டு. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதனையும் மேலதிகப் பற்றை வழங்குவதற்கு வங்கி செய்துகொண்டுள்ள வெளிப்படையான அல்லது மறைமுகமான ஒப்பந்தமாக அர்த்தம் கொள்ள முடியாது.

17. நடைமுறைக் கணக்குத் தொடர்பான ஏதேனும் மேலதிகப் பற்று அல்லது கடன் வசதி நடைமுறையில் இருக்கும்போது, மேற்குறிப்பிட்ட கணக்கில் (கணக்குகளில்) வைப்புச் செய்யப்படும் பணத் தொகைகள், மேற்குறிப்பிட்ட மேலதிகப் பற்று அல்லது கடன் வசதி தொடர்பில் வங்கியின் வழமையான வியாபார நடைமுறைக்கு அமைவாக காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் அல்லது அறவிடப்படும் வங்கியாளரின் அறவீடுகள், இலாபத் தொகைகள் மற்றும் சகல விதமான செலவுகளையும் கழித்துக்கொள்வதற்கே முதலில் பயன்படுத்தப்படும். இந்த அறவீடுகள் முழுமையாகச் செலுத்தப்பட்ட பின்பே, வரவு வைக்கப்பட்ட பணத்தில் எஞ்சியுள்ள தொகையானது முன்சொல்லப்பட்ட மேலதிகப் பற்றை அல்லது கடன் வசதியைத் தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படும்.

18. வாடிக்கையாளரினால் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகை அல்லது தொகைகள் நிலுவையாக இருக்குமாயின், வழமையான வங்கி நடைமுறைக்கேற்ப அபராதங்களை விதிக்க வங்கிக்கு உரிமையுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில், அபராதத் தொகைகள் யாவும் வங்கியினால் பேணப்படும் தரும நிதியத்தில் நேரடியாக வரவு வைக்கப்படும். வங்கி அதிலிருந்து தனது செலவுகளைக் கழித்துவிட்டு, எஞ்சிய தொகையை ஷரிஆ மேற்பார்வை மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரும ஸ்தானத்திற்கு வழங்கும்.

19. காசோலை வைப்புப் பெட்டிகள், தன்னியக்க டெலர் இயந்திரங்கள் (ATMs) என்பவற்றின் மூலம் தற்காலிகப் பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டாலும், அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும் வரை, அவை தொடர்பான எவ்வித உரிமைக் கோரல்களையும் வங்கி எந்த சூழ்நிலையிலும் எந்தக் காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளமாட்டாது. வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும் காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்கப்படுகின்றன. வழங்கும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பின்பே, அக் காசோலைகளுக்கான பணத்தைப் பெற முடியும். பணம் கிடைக்கும் திகதியெனக் குறிப்பிடப்படும் திகதி, சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக மட்டுமே.

20. நம்பிக்கைப் பொறுப்பு அமைப்புக்களை வங்கி அங்கீகரிப்பதில்லை.

21. வாடிக்கையாளரின் கணக்கு(கள்) தொடர்பாக ஏனைய வங்கிகள் விசாரிக்கும்போது, வாடிக்கையாளரிடம் கேட்காமலே பதிலளிக்க வாடிக்கையாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார்.

22. வங்கி தனது வசதிகளையும் சேவைகளையும் இஸ்லாமிய வங்கியியல் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே வழங்குகின்றது என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்கிறார். இதன் பிரகாரம், வாடிக்கையாளர் வங்கியில் ஒரு கணக்கை ஆரம்பிக்கும்போது, காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் அத்தகைய வங்கிக் கோட்பாடுகளுக்குப் பணிந்து நடக்க வேண்டும். வங்கியினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகளுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள ஷரிஆ அம்சமானது, வங்கியின் ஷரிஆ மேற்பார்வைக் குழுவின் வழிகாட்டுதல்களுக்கும் தீர்மானங்களுக்கும் அமைவானதாக இருக்கும்.

23. வங்கியானது வங்கியின் ஷரிஆ மேற்பார்வைக் குழு வழங்கும் வழிகாட்டுதலின் கீழ் ஷரிஆ சட்டத்திற்கு அமைவாக நடப்பதுடன், வங்கிகள் தொடர்பாக இலங்கையிலுள்ள சகல வழமையான சட்டங்கள் மற்றும் பிரமாணங்களினாலும் (இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பிரமாணங்கள் மற்றும் பணிப்புரைகளும் இவற்றில் அடங்கும்) ஆட்சி செய்யப்படும்.

24. வங்கியினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகளுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள ஷரிஆ அம்சம் தொடர்பில் ஏதேனும் சர்ச்சை ஏற்படுமாயின், வங்கியின் ஷரிஆ மேற்பார்வைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக இருக்கும்.

25. வங்கி தனது பூரண சுய விருப்பத்திற்கேற்ப, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் காலத்திற்குக் காலம் திருத்தங்கள், சேர்ப்புக்கள் அல்லது பதிலீடுகளைச் செய்ய முடியும். அத்தகைய திருத்தங்கள், சேர்ப்புக்கள் அல்லது பதிலீடுகள் குறித்து வங்கியினால் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும். திருத்தப்பட்ட, சேர்க்கப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை வங்கியின் தலைமை அலுவலகத்திலும் கிளைகளிலுமுள்ள வங்கிச் சேவை மண்டபங்களில் பார்வைக்கு வைத்தல், அத்தகைய திருத்தங்கள், சேர்ப்புக்கள் அல்லது பதிலீடுகள் பற்றிய போதுமான அறிவித்தலாகக் கருதப்படும்.

26. அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்ட பின்பும், வாடிக்கையாளர் தனது வங்கிக் கணக்கை அல்லது கணக்குகளைத் தொடர்ந்து செயற்படுத்தினால், அவர் அந்தத் திருத்தங்கள், சேர்ப்புக்கள் அல்லது பதிலீடுகளை ஏற்றுக்கொண்டுள்ளார் என்று கருதப்படும். அவ்வாறு இல்லாவிடின், அத்தகைய திருத்தங்கள், சேர்ப்புக்கள் அல்லது பதிலீடுகளுக்கான அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் வாடிக்கையாளர் தனது ஆட்சேபனைகளை வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

நான்/நாம் டேற்கூறிய நிபந்தனைகளுக்கு ஒத்துகொள்கிறேன்/ஒத்துகொள்கிறோம்.

| | |
|---|---|
| ............................................................................................. | ............................................................................................. |
| கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | கணக்கு வைத்திருப்பவரின் கையொப்பம் |
| ............................................................................................. | ............................................................................................. |
| கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | கணக்கு வைத்திருப்பவரின் கையொப்பம் |
| ............................................................................................. | ............................................................................................. |
| கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | கணக்கு வைத்திருப்பவரின் கையொப்பம் |
| கணக்கு இல. : | திகதி : |